ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம் பாடாலூர் கிராம ஊராட்சி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள் முன்னிலை: திருமதி.நாகஜோதி இளையராஜா

ஆலத்தூர் ஒன்றியம் ஊராட்சி மன்ற அலுவலகம், பாடாலூர் 621 109. பெரம்பலூர் மாவட்டம்

ந.க.எண்: 005/2024 நாள்: 07/08/2024

பொருள்: புதிய மனைப்பிரிவு – ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம் -பாடாலூர் ஊராட்சி கிராம புல எண்:18/1B4B,-ல்ஏக் 1.00 செண்ட் பரப்பளவு கொண்ட இடத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவு அமைத்திட நில பயன் மாற்றம் சான்றுக்கு 3% சந்தை மதிப்பு தொகை செலுத்துதல் -மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கி உத்தரவிடுதல் தொடர்பாக.

பார்வை:

1. திரு.செந்தில்குமார் த/பெ.பெரியசாமி என்பவரின் மனு நாள் : 06/08/2024
2. பதிவுத்துறை ஆவணங்கள் ஒப்படைப்பு நாள்:26/07/2024
3. இணை இயக்குநர் நகர் ஊரமைப்புத்துறை பெரம்பலூர் மண்டலம் அவர்களின் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு எண் ம.வ/ந.ஊ.து.இ(பெ.மா) எண் 41/2024
4. தமிழ்நாடு பத்திரப்பதிவு துறை சந்தை மதிப்பு நெறிமுறை நாள்: 06.08.2024
5. மனுதாரர் 3% சந்தை விழுக்காடு அரசு தலைப்பில் செலுத்திய நாள் :07.08.2024

உத்தரவு:

ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம் பாடாலூர் கிராம ஊராட்சி புல எண்:18/1B4B-ல் ஏக் 1.00 செண்ட் பரப்பளவு கொண்ட இடத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவு அமைத்திட மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்குமாறு பார்வை 1-ல் காணும் மனுவில் மனுதாரரால் கோரப்பட்டுள்ளது.பார்வை 2-ல் காணும் உதவி இயக்கநர் நகர் ஊரமைப்புத்துறை பெரம்பலூர் அவர்களின் கடிதத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பொது பயன்பாட்டிற்கான

இடம் ஆகியவற்றை தனியாரிடமிருந்து பாடாலூர் ஊராட்சி மன்ற தலைவருக்கு என்ற பெயருக்கு தானமாக பெற்றுக்கொண்டு நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் பார்வை 4-ல் காணும் நாளில் சாலைகள் மற்றும் பொது இடத்தினை பதிவுத்துறையின் மூலம் பதிவு செய்து மனுதாரரால் முறையாக ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது சாலைகள் பதிவுத்துறையின்மூலம் பதிவு செய்து மனுதாரரால் முறையாக ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 3ல் காணும் கடிதத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவினை நில பயன் மாற்றம் சான்றுக்கு சந்தை மதிப்பு தொகையில் 3% தொகை உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட வேண்டுமென அறிவுறுத்தியதற்கினங்க பார்வை 5ல் காணும் தமிழ்நாடு பத்திரபதிவு துறை நெறிமுறைகளில் தெரிவித்துள்ளபடி சந்தை மதிப்பு தொகையின் அடிப்படையில் புல எண்: 18/1B4b –ல் 1.00 ஏக்கர் செண்ட் பரப்பளவில் உள்ள 20 மனைப்பிரிவிற்கு ரூ.16200-யை(ரூபாய் பதினாறு ஆயிரத்து இருநூறு மட்டும்) பார்வை 5ல் காணும் நாளில் மனுதாரரால் உரிய அரசு தலைப்பில் செலுத்தியுள்ளதாலும் மேற்படி புல எண்ணில் அமையும் குடியிருப்புக்கான மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

ஊராட்சி மன்றதலைவர்

பாடாலூர்.

தலைவர்,
பாடாலூர் ஊராட்சி.

பெறுநர்:

திரு.பி.செந்தில்குமார்
பாடாலூர் ஊராட்சி
ஆலத்தூர் வட்டம்
பெரம்பலூர் மாவட்டம்.த்

# தீர்மான நகல்

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் நாள் வியாழக் கிழமை

காலை / மாலை 11 மணிக்கு பாடாலூர் ஊராட்சியின்

சிறப்பு / அவசர கூட்டத்தின் நடவடிக்கைகள்

இடம் : **ஊராட்சி மன்ற அலுவலகம்** கிராம சபை

வருகை : **தலைவர்,** திரு / திருமதி நாகஜோதி இளையராஜா அவர்களும்

மற்றும்........................................ அங்கத்தினர்களும்.

ஆலத்தூர் ஒன்றியம் ஊராட்சி அலுவலகம் பாடாலூர் 621 109 பெரம்பலூர் மாவட்டம்

| பொருள் | தீர்மானம் |
|---|---|
| ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம் பாடாலூர் ஊராட்சியில் செந்தில்குமார் த/பெ பெரியசாமி என்பவருக்கு சொந்தமான சர்வே எண்: 118/1B4Bல் 1 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள குடியிருப்பு மனை பிரிவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பொது இடப்பரப்பினை தான பத்திரம் மூலம் பாடாலூர் ஊராட்சி மன்ற தலைவருக்கு முறையாக ஒதுக்கப்பட்டதால் மனைப்பிரிவுக்கு ஒப்புதல் அளித்து மன்றம் ஏக மனதாக தீர்மானிக்கப்படுகிறது. | அங்கீகரிக்கப்பட்டது. |

(உண்மை நகல்)

D. Nagajothi

**தலைவர்**
பாடாலூர் ஊராட்சி